# KAYALPATTINAM MUNICIPALITY
## FORM 3
### Minutes of the Meeting held on 13.01.2014

<table>
<tr><th>Date of Council Meeting</th><th>Decision Number</th><th>Subject of the Agenda</th><th>Resolution</th></tr>
<tr><td>13.01.2014</td><td>705</td><td>ஒத்திவைக்கப்பட்டுள்ள கூட்டப் பொருள்:-<br>பொருள் எண்:-1<br>காயல்பட்டணம் நகராட்சியில் 29.05.2013 முதல் 19.06.2013 வரை உள்ள செலவு சீட்டுகள் மன்ற அங்கீகாரத்திற்கு.<br>
<table>
<tr><th colspan="4"><u>காயல்பட்டணம் நகராட்சி</u><br><u>செலவுச் சீட்டு 29.05.2013 முதல் 19.06.2013 வரை</u></th></tr>
<tr><td>வ. எண்</td><td>தேதி</td><td>விபரம்</td><td>தொகை</td></tr>
<tr><td>1</td><td>29.05.2013</td><td>நகராட்சி பகுதியில் தார் சாலை அமைத்தமைக்கு தொகை வழங்கியது</td><td>579000/-</td></tr>
<tr><td>2</td><td>29.05.2013</td><td>நகராட்சி அலுவலககட்டிடம் புதிதாக கட்ட மண் பரிசோதனை செய்ய திருநெல்வேலி பொறியியல் கல்லூரிக்கு சோதனை கட்டணம் செலுத்தியது</td><td>28484/-</td></tr>
<tr><td>3</td><td>30.05.2013</td><td>நகராட்சி அலுவலகஊழியர்களின் மே-2013 மாத ஊதியம்</td><td>225685/-</td></tr>
<tr><td>4</td><td>04.06.2013</td><td>நகராட்சி பொறியார் திரு.சிவக்குமார் அவர்களுக்கு 05/203 மாத ஊதியம் மற்றும் மாதந்திர மன்ற கூட்டமர்வுபடி வழங்கியது</td><td>34986/-</td></tr>
<tr><td>5</td><td>04.06.2013</td><td>நகராட்சி தொழில்நுட்ப உதவியாளர்க்கு 05/2013 மாத ஊதியம் வழங்கியது</td><td>10080/-</td></tr>
<tr><td>6</td><td>04.06.2013</td><td>நகராட்சி சுகாதார பணியாளர்களின் 05/2013 மாத ஊதியம்</td><td>239804/-</td></tr>
<tr><td>7</td><td>06.06.2013</td><td>நகராட்சி ஒப்பந்த பணியாளர்களின் 05/2013 மாத ஊதியம்</td><td>68125/-</td></tr>
<tr><td>8</td><td>10.06.2013</td><td>நகராட்சி பகுதியில் திறந்த நிலை கழிப்பறை கட்டி கொடுத்தமைக்கு தொகை வழங்கியது.</td><td>175669/-</td></tr>
<tr><td>9</td><td>10.06.2013</td><td>நகராட்சி பொது சுகாதார பிரிவில் கொசு மருந்து அடித்தமைக்காக தினக்கூலி பணியாளர்களுக்கு ஊதியம் வழங்கியது</td><td>51150/-</td></tr>
</table></td><td>ஒத்தி வைக்கப்படுகிறது</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| 10 | 10.06.2013 | இரண்டாம் குடிநீர் திட்டத்திற்காக பைப் லைன் பொன்னர்குறிச்சியிலிருந்து காயல்பட்டணம் வரை மண் தோண்டுவதற்க்கு அனுமதி வேண்டி நெடுஞ்சாலை துறைக்கு கட்டணம் செலுத்தியது | 1000000/- |
| 11 | 11.06.2013 | நகராட்சி அலுவலகத்திற்கு தேவையான எழுது பொருட்கள் மற்றும் பதிவேடுகள் வாங்கியமைக்கு தொகை வழங்கியது. | 44800/- |
| 12 | 11.06.2013 | நகராட்சி பொது சுகாதார பிரிவிற்கு சுகாதார நலன் கருதி பளிச்சிங் பவுடர் வாங்கியமைக்கு தொகை வழங்கியது | 84750/- |
| 13 | 14.06.2013 | நகராட்சி பொதுப் பணி மேற்பார்வையாளர்க்கு பயணப்படி வழங்கியது | 7797/- |
| 14 | 14.06.2013 | சமுதாய அமைப்பாளர்(பொ) அவர்களுக்கு பயணப்படி வழங்கியது | 480/- |
| 15 | 18.06.2013 | நகராட்சி பணியாளர்களின் 05/2013-ம் மாத ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட சிக்கண நாணய சங்க தொகை உரிய தலைப்பில் செலுத்தியது. | 122900/- |
| 16 | 18.06.2013 | நகராட்சி பணியாளர்களின் ஈட்டிய விடுப்பு ஒப்படைப்பு ஊதியம் மற்றும் நகராட்சி வருவாய் ஆய்வாளர் அவர்களின் D.A நிலுவை தொகை வழங்கியது | 36251/- |
| 17 | 18.06.2013 | நகராட்சி பகுதி தெருவிளக்கு மற்றும் குடிநீர் பணிகளுக்கு மின்விநியோகம் செய்தமைக்கு ஆறுமுகநேரி மின்வாரியத்திற்கு தொகை வழங்கியது. | 171721/- |
| 18 | 18.06.2013 | நகராட்சி பகுதி தெரு விளக்கு அலுவலககட்டிடம் ஆகியவற்றிற்கு மின் விநியோகம் செய்தமைக்கு கட்டணம் தொகை செலுத்தியது | 159819/- |
| 19 | 18.06.2013 | நகராட்சி பணியாளர்களின் ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட சேமநலநிதி, குடும்ப நலநிதி ஆகியவை மார்ச்-2012 முதல் பிப்ரவரி-13 முடிய காலத்திறக்கு உரிய தலைப்பில் செலுத்தியது. | 973226/- |
| 20 | 18.06.2013 | நகராட்சி அலுவலகதொலைபேசி எண்-285336 மற்றும் நகர்மன்ற துணைத் தலைவர் அவர்களின் தொலைபேசி எண்:-283204-க்கு கட்டணம் செலுத்தியது | 2098/- |

<table>
<tr><td></td><td></td><td><table>
<tr><td>21</td><td>18.06.2013</td><td>நகராட்சி வாகனங்களுக்கு எரிபொருள் நிரப்பியமைக்கு தொகை வழங்கியது.</td><td>195536/-</td></tr>
<tr><td>22</td><td>18.06.2013</td><td>தூத்துக்குடி மாவட்ட நீதிமன்ற வழக்கு எண்:- 57/2013-க்கு அரசு வழக்கறிஞர் கட்டணம் செலுத்தியது.</td><td>4000/-</td></tr>
<tr><td>23</td><td>19.06.2013</td><td>பொன்விழா நகர்புற வேலைவாய்ப்பு திட்டம் நிதியினை இந்தியன் ஓவர்சீஸ் வங்கியிலிருந்து உரிய தலைப்பிற்கு பிரித்து வழங்கியது.</td><td>84567/-</td></tr>
</table>
.அலுவலககுறிப்பு:-<br>மன்றம் அங்கீகரிக்கலாம்.</td><td></td></tr>
<tr><td></td><td>706</td><td>பொருள் எண்:-2<br>காயல்பட்டணம் நகராட்சியின் பட்ஜெட் - 2013-14 நகர்மன்றத்தின் ஒப்புதலுக்கு.<br>அலுவலககுறிப்பு:-<br>மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.</td><td>மன்றம் ஒப்புதல் வழங்குகிறது</td></tr>
<tr><td></td><td>707</td><td>ஜனவரி - 2014 மாத கூட்டப் பொருள்:-<br>பொருள் எண்:-3<br>காயல்பட்டணம் நகராட்சியில் வடகிழக்கு பருவ மழையின் காரணமாக ஒருவழிப்பதையான தாயிம்பள்ளி முதல் புதிய பேருந்து நிலையம் வரை உளள சாலையில் அதிக அளவில் மழைநீர் தேங்கியுள்ளதால் பொதுமக்கள் மற்றும் வாகனங்கள் செல்ல முடியாமல் மிகுந்த சிரமப்படுவதால் அந்த சாலையில் மழைநீர் தேங்கியுள்ள பள்ளமான பகுதியில் கிணற்று சரள் பயன்படுத்தி நிரப்ப நடவடிக்கை எடுக்க நகர்மன்ற தலைவர் மற்றும் ஆணையாளர் அவர்களின் அறிவுரையின்படி தாழ்வான பகுதிகளில் கிணற்று சரள் நிரப்பவும் அதற்குரிய செலவினத் தொகையினை நகராட்சி பொதுநிதியிலிருந்து ஈடு செய்யவும் நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>(1) மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(2) நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பட்டியல் தொகை ரூ.8000/-த்தை ஏ.ஆர்.வி. டிரேடர்ஸ், காயல்பட்டணம் என்பவருக்கு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.</td><td>மன்றம் அனுமதி வழங்குகிறது</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | 708 | **பொருள் எண்:- 4**<br>காயல்பட்டணம் நகராட்சிக்கு மன்ற கட்டிடத்திற்கு மற்றும் அலுவலகத்திற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகம் சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகம் திருநெல்வேலி திட்ட அறிக்கைகள் ஆவணங்கள் தயார் செய்ய ஜெராக்ஸ் நகல்கள் எடுக்க ரூ.3801/- வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>அவசர அவசியம் கருதி உடனே ஜெராக்ஸ் நகல்கள் எடுக்கப்பட்டது, SRS கம்ப்யூட்டர் நிறுவனம் காயல்பட்டணத்திற்கு தொகை ரூ.3801/- நகர்மன்ற தலைவர் அவர்களின் 08.01.2014 தேதியில் முன்அனுமதி பெற்று வழங்கியதை மன்றம் ஏற்கலாம். | மன்றம் அனுமதி வழங்குகிறது |
| | 709 | **பொருள் எண்:- 5**<br>காயல்பட்டணம் நகராட்சிக்கு சொந்தமான வாகனம் எண்:-TN69 AY0603 லாரிக்கு பழுது ஏற்பட்டுள்ளது குப்பை அகற்றும் பணி மிகுந்த சிரமம் ஏற்பட்டுள்ளதால் உடனடியாக பழுது நீக்கம் செய்ய டி.வி.எஸ். நிறுவனம், திருநெல்வேலிக்கு விலைப்புள்ளி கோரப்பட்டது. மேற்படி விலைப்புள்ளிப்படி ரூ.64950/-க்கு பணிபார்க்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:-**<br>டி.வி.எஸ்.நிறுவனம், திருநெல்வேலிக்கு வேலை உத்திரவு வழங்கி TN69 AY0603 லாரியினை பழுது நீக்கம் செய்த தொகை ரூ.62937/-ஐ நகர்மன்ற தலைவரின் 18.12.2013 தேதியில் அனுமதி பெறப்பட்டு 26.12.2013 தேதியில் தொகை வழங்கப்பட்டதற்கு மன்றம் அனுமதிக்கலாம். | மன்றம் அனுமதி வழங்குகிறது |
| | 710 | **பொருள் எண்:- 6**<br>திருநெல்வேலி மண்டல நகராட்சிகளின் பொன்விழா ஆண்டு நகர்புற வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ் கடனுதவி பெற்ற சுயஉதவி குழுக்களால் தயார் செய்யப்பட்டுள்ள பொருட்களின் விற்பனை மற்றும் கண்காட்சி நிகழ்ச்சிகள் 28.12.2013 முதல் 30.12.2013 வரை நடைபெற உள்ளது. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் கடித எண்:-3237/2013/சி1 நாள்:-18.12.2013 தேதிய கடிதத்தில் திருநெல்வேலி சந்திப்பு அருகில் உள்ள ராஜ்மஹால் திருமண மண்டபத்தில் நடைபெற இருக்கும் மேற்கண்ட நிகழ்சிக்கு கடைகள் அமைத்தல், மின்விளக்குகள் அமைத்தல், தங்கும் வசதி, உணவு வசதி, விளம்பர பலகை அமைத்தல் போன்ற இதர பணிகள் மேற்கொள்வதற்கு ஒவ்வொரு நகராட்சிக்கும் பங்கு தொகையாக ரூ.20,000/- வழங்க தெரிவிக்கப்பட்டது. மேற்படி தொகையினை (UCDN) நகர்புற சமுதாய மேம்பாட்டு கட்டமைப்பு நிதியில் ஈடு செய்து கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறது. மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. | மன்றம் அனுமதி வழங்குகிறது |

<table>
<tr><td></td><td></td><td>அலுவலக குறிப்பு:-<br>2013-2014 ஆம் ஆண்டு (UCDN திட்டம்) நகர்புற சமுதாய மேம்பாட்டு கட்டமைப்பு திட்டத்தில் காயல்பட்டணம் நகராட்சிக்கு ரூ.15301/- ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள ரூ.4699/-ஐ பொது நிதியில் செலவு செய்து கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். அவசர அவசியம் கருதி ரூ.20,000/- பொது நிதியில் 03.01.2014 தேதியில் வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.</td><td></td></tr>
<tr><td></td><td>711</td><td>பொருள் எண்:- 7<br>காயல்பட்டணம் நகராட்சி மீது திரு.எம்.எஸ்.முகம்மது சாலிகு, காயல் டிரஸ்ட் என்பரால் இணையதளம் வளைதளம் குறித்து உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் வழக்கு (WPNO16176/2012) தொடர்ந்துள்ளார்.<br>இவ்வழக்கிற்கு நகராட்சி சார்பாக ஆஜராக திரு.ஏ.கே.பாஸ்கரபாண்டியன் சிறப்பு அரசு வழக்கறிஞர் மற்றும் திரு.D.முருகானந்தம் கூடுதல் அரசு வழக்கறிஞர் உயர்நீதிமன்றம் மதுரை அவர்கள் ஆஜராகி வருகிறார்கள் வழக்கின் தற்போதைய நிலை கோரபட்டது. வழக்கு கட்டணமாக ரூ.1000/- வழங்க கோரி 27.12.2013 தேதிய கடிதத்தில் கோரியுள்ளார் மன்றத்தின அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:-<br>நகர்மன்ற தலைவர் அவர்கள் முன்அனுமதி பெற்று ரூ.1000/- வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.</td><td>மன்றம் அனுமதி வழங்குகிறது</td></tr>
<tr><td></td><td>712</td><td>பொருள் எண்:- 8<br>காயல்பட்டணம் நகராட்சியில் டிசம்பர் - 2013 பிறப்பு இறப்பு மன்றத்தின் அங்கீகாரத்திற்கு.<table><tr><th>மாதம்</th><th>பிறப்பு</th><th>இறப்பு</th></tr><tr><td>டிசம்பர்</td><td>60</td><td>32</td></tr></table>அலுவலககுறிப்பு:<br>மன்றம் அங்கீகரிக்கலாம்.</td><td>மன்றம் அங்கீகரிக்கிறது</td></tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>713</td>
<td>பொருள் எண்:- 9<br>சேதுராஜா தெரு மயானக்கரைக்கு அருகில் உள்ள இரண்டு கிணறுகளும் தூர்ந்து விட்டதால் 392/5 சர்வே எண்ணில் புதியதாக ஓர் கிணறு அமைத்து அனைத்து சமுதாய மக்களும் உபயோகப்படுத்திட அனுமதி வேண்டி கேட்டுக் கொண்ட 18-வது வார்டு உறுப்பினர் திரு.E.M.சாமி அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கம் முடிவிற்கும்.<br>அலுவலக குறிப்பு:-<br>மன்றம் அங்கீகரிக்கலாம்.</td>
<td>காயல்பட்டணம் நகராட்சியில் பொருள் எண் 9-ல் குறிப்பிட்டுள்ள .இடத்திற்கும் மற்றும் காயல்பட்டணம் நகராட்சி பகுதியில் அமைந்துள்ள மயானங்களில் உள்ள கிணறுகள் அனைத்தையும் தூர் வாருவதற்கும் மன்றம் அனுமதி வழங்குகிறது</td>
</tr>
<tr>
<td></td>
<td>714</td>
<td>பொருள் எண்:- 10<br>காயல்பட்டணம் நகராட்சியில் பொது நிதி பணிகள் 2013-14-ன் கீழ் கீழ்க்கண்ட பணிகளுக்கு மூன்றாவது அழைப்பாக ஒப்பந்தப்புள்ளி 08.01.2014 அன்று கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.
<table>
<tr><th>வ. எண்</th><th>பணியின் பெயர்</th><th>மதிப்பீடு (இலட்சத்தில்)</th><th>ஒப்பந்தகாரர் பெயர் / முகவரி</th><th>ஒப்பந்தவகை (மதிப்பீடு ரேட்டுக்கு)</th></tr>
<tr><td rowspan="2">1</td><td rowspan="2">கற்புடையாளர் பள்ளி வட்டம் வடக்கு காலனி தெற்கு காலனி மற்றும் அண்ணா நகர் பகுதிகளில் குடிநீர் விநியோகக் குழாய் விஸ்தரிப்பு செய்தல்</td><td rowspan="2">1.10</td><td>ஆர்.தலவாணிமுத்து காயல்பட்டணம்</td><td>0.34% குறைவு</td></tr>
<tr><td>த.தங்கப்பூ காயல்பட்டணம்</td><td>1.45% கூடுதல்</td></tr>
<tr><td rowspan="2">2</td><td rowspan="2">நயினார் தெருவில் ஏற்கனவே பதிக்கப்பட்டுள்ள மெயின் குழாயினை தோண்டி எடுத்து மீண்டும் ஆழமாக பதித்தல்</td><td rowspan="2">0.22</td><td>ஆர்.தலவாணிமுத்து காயல்பட்டணம்</td><td>0.65% குறைவு</td></tr>
<tr><td>த.தங்கப்பூ காயல்பட்டணம்</td><td>1.93% கூடுதல்</td></tr>
<tr><td rowspan="2">3</td><td rowspan="2">வார்டு எண்:-13 அவன் செயல் காலனி தெற்கு தெருவில் குடிநீர் குழாய் விஸ்தரிப்பு செய்தல்</td><td rowspan="2">0.12</td><td>ஆர்.தலவாணிமுத்து காயல்பட்டணம்</td><td>0.39% குறைவு</td></tr>
<tr><td>த.தங்கப்பூ காயல்பட்டணம்</td><td>1.66% கூடுதல்</td></tr>
</table></td>
<td>மன்றம் அனுமதி வழங்குகிறது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><td rowspan="2">4</td><td rowspan="2">வார்டு எண்:-10 காயிதே மில்லத் நகர் 5, 6 மற்றும் 7 ஆகிய தெருக்களில் குடிநீர் குழாய் விஸ்தரிப்பு செய்தல்</td><td rowspan="2">0.50</td><td>ஆர்.தலவாணிமுத்து காயல்பட்டணம்</td><td>0.34% குறைவு</td></tr>
<tr><td>த.தங்கப்பூ காயல்பட்டணம்</td><td>1.42% கூடுதல்</td></tr>
<tr><td rowspan="2">5</td><td rowspan="2">வார்டு எண்:-10 அலியார் தெருவிலிருந்து குட்டியா பள்ளி வரை குடிநீர் குழாய் விஸ்தரிப்பு செய்தல்</td><td rowspan="2">1.00</td><td>ஆர்.தலவாணிமுத்து காயல்பட்டணம்</td><td>0.37% குறைவு</td></tr>
<tr><td>த.தங்கப்பூ காயல்பட்டணம்</td><td>1.55% கூடுதல்</td></tr>
<tr><td rowspan="2">6</td><td rowspan="2">15-வது வார்டுக்குட்பட்ட சிவன் கோவில் தெருவில் குடிநீர் குழாய் விஸ்தரிப்பு செய்தல்.</td><td rowspan="2">0.25</td><td>ஆர்.தலவாணிமுத்து காயல்பட்டணம்</td><td>0.17% குறைவு</td></tr>
<tr><td>த.தங்கப்பூ காயல்பட்டணம்</td><td>0.95% கூடுதல்</td></tr>
</table>
மேற்கண்ட பணிகளுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளகளை அங்கீகரிக்க நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலக குறிப்பு:-<br>
மன்றம் அனுமதி வழங்கலாம்.
</td>
<td></td>
</tr>
<tr>
<td></td>
<td>715</td>
<td>பொருள் எண்:-11<br>
காயல்பட்டணம் நகராட்சியில் பொறியில் பிரிவு கணிப்பொறி வாங்கி பல ஆண்டுகள் ஆகிவிட்டதால் அதில் அடிக்கடி பழுதுகள் ஏற்பட்டு பொறியியல் பிரிவு பணிகள் வெகுவாக பாதிக்கப்படுகிறது. எனவே பொறியியல் பிரிவிற்கு தனியாக புதிய கணிப்பொறி வாங்குவதற்கு நகர்மன்ற அனுமதி வேண்டப்புடுகிறது.<br>
அலுவலக குறிப்பு:-<br>
அரசு நிர்ணயித்த விலையில் புதிய கணிப்பொறி வாங்குவதற்கும் அதற்குரிய செலவினத் தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து ஈடு செய்திடவும் நகர்மன்றம் அனுமதி வழங்கலாம்.
</td>
<td>மன்றம் அனுமதி வழங்குகிறது</td>
</tr>
</table>

<table>
<tr><td></td><td>716</td><td>பொருள் எண்:-12<br>காயல்பட்டணம் நகராட்சியில் தெருவிளக்குகளை பராமரிக்கத் தேவையான மின்சாதனப் பொருட்கள் வாங்குவதற்கு 09.01.2014 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க் கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப் பெற்றுள்ளது.<br>
<table>
<tr><th>வ. எ ண்</th><th>பணியின் பெயர்</th><th>மதிப்பீடு (இலட்சத்தில்)</th><th>ஒப்பந்தகாரர் பெயர் / முகவரி</th><th>ஒப்பந்தவகை (மதிப்பீடு ரேட்டுக்கு)</th></tr>
<tr><td rowspan="2">1</td><td rowspan="2">நகராட்சி தெரு விளக்குகளை பராமரிக்க தேவையான மின்சாதனப் பொருட்கள் சப்ளை செய்தல்</td><td rowspan="2">2.00</td><td>வேல்முருகன் ஏஜென்சி, நாகர்கோவில்</td><td>0.34% குறைவு</td></tr>
<tr><td>கார்த்திக் டிஸ்ட்ரிபியூட்டர், நாகர்கோவில்</td><td>0.51% கூடுதல்</td></tr>
</table>
வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிள் குறைந்த விலை கோரியுள்ள வேல்முருகன் ஏஜென்சி, நாகர்கோவில் என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை அங்கீகரிக்க நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலக குறிப்பு:-<br>
மன்றம் அனுமதி வழங்கலாம்.</td><td>மன்றம் அனுமதி வழங்குகிறது</td></tr>
<tr><td></td><td>717</td><td>பொருள் எண்:-13<br>காயல்பட்டணம் நகராட்சிக்கு பாத்தியப்பட்ட 392/5 சர்வே எண்ணிற்குட்பட்ட இடத்தின் எல்லைகளை அளப்பதற்கு ஏதுவாக சுத்தம் செய்து தர கேட்டுக் கொண்ட சர்வேயரின் அறிவுரைப்படி ஜே.சி.பி. எந்திரம் மூலம் சுத்தம் செய்ததற்கான தொகை ரூ.7565/- கே.ஆர்.எர்த் மூவர்ஸ், நாசரேத் என்ற நிறுவனத்திற்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலக குறிப்பு:-<br>
மன்றம் அனுமதி வழங்கலாம்.</td><td>மன்றம் அனுமதி வழங்குகிறது</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | 718 | **பொருள் எண்:-14**<br>காயல்பட்டணம் நகராட்சியில் 27.09.13-ல் நடைபெற்ற மன்றக் கூட்டத்தில் எனது கோரிக்கையான பொருள் எண்:-1-ல் காயல்பட்டணம் நகராட்சி வார்டு எண்:-3 மற்றும் 7-ல் என்பதனை 6-வது வார்டுக்கு தொடர்புடையது என்று திருத்திட கேட்டுக் கொண்ட 6-வது வார்டு உறுப்பினர் திரு. ஏ.கே.முகம்மது முகைதீன் அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும்.<br>**அலுவலக குறிப்பு:-**<br>மன்றம் அனுமதி வழங்கலாம். | மன்றம் அனுமதி வழங்குகிறது |
| | 719 | **பொருள் எண்:-15**<br>காயல்பட்டணம் நகராட்சி பகுதி 6-வது வார்டில் உள்ள துஷ்டராயர் தெருவினை ஆஸாத் தெரு என பெயர்மாற்றம் செய்திட கடந்த கால 1986-87-ம் ஆண்டுகளில் அன்றைய மேற்படி பகுதி வார்டு உறுப்பினர் மறைந்த திரு.ச.த.முகம்மது அலி அவர்கள் மாற்றக் கொண்டுவந்த பொருளின்படி அதனை மன்ற குறிப்பில் மாற்ற பரிந்துரைக்கப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. 6-வது வார்டு உறுப்பினர் திரு. ஏ.கே.முகம்மது முகைதீன் அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும்.<br>**அலுவலக குறிப்பு:-**<br>மன்றம் அனுமதி வழங்கலாம். | மன்றம் அனுமதி வழங்குகிறது |
| | 720 | **பொருள் எண்:-16**<br>கடந்த 27.09.2013-ல் நடைபெற்ற மன்றகூட்டத்தின் வாயிலாக பொருள் எண்:-57ல் காயல்பட்டணம் நகராட்சி பகுதி 6-வது வார்டு பகுதிக்குள்ளடக்கிய சித்தன் தெருவிற்கும் கீழ நெய்னார் தெருவிற்குமிடையில் கிழ-மேல் குறுக்குச் சாலை குண்டும் குழியுமாக இருக்கும் காரணத்தினால் மேற்படி குறுக்குச் சாலையினை புதுப்பிக்க கொண்டுவரப்பட்ட தீர்மானம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. அதனை துரிதப்புடுத்துமாறு கேட்டுக் கொண்ட 6-வது வார்டு உறுப்பினர் திரு. ஏ.கே.முகம்மது முகைதீன் அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும்.<br>**அலுவலக குறிப்பு**<br>மன்றம் அனுமதி வழங்கலாம். | மன்றம் அனுமதி வழங்குகிறது |

| | | | |
|---|---|---|---|
| | 721 | **பொருள் எண்:-17**<br>30.12.13-ல் மறைந்த திருநெல்வேலி நகராட்சிகள் நிர்வாக மண்டல இயக்குநர் திரு.மோகன் அவர்களுக்கும் மற்றும் 05.01.14-ல் மறைந்த காயல்பட்டணம் நகராட்சி துப்புரவு பணியாளர் திரு.பெருமாள் அவர்களுக்கு இரங்கல் தீர்மானம் நிறைவேற்றிட கேட்டுக் கொண்ட 6-வது வார்டு உறுப்பினர் திரு. ஏ.கே.முகம்மது முகைதீன் அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும்.<br>**அலுவலக குறிப்பு**<br>மன்றம் அனுமதி வழங்கலாம். | திருநெல்வேலி நகராட்சிகள் நிர்வாக மண்டல இயக்குநர் திரு.மோகன் அவர்களுக்கும், காயல்பட்டணம் நகராட்சி துப்புரவு பணியாளர் திரு.பெருமாள் அவர்களுக்கும் இரங்கள் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. |
| | 722 | **பொருள் எண்:-18**<br>காயல்பட்டணம் நகராட்சியில் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் கணிணி இயக்குநர் 1, வாகன ஓட்டுநர்கள் 2 நபர்கள், மற்றும் ரோஜா ஆண்கள் சுயஉதவிக்குழுவை சேர்ந்த 9 பணியாளர்கள் ஆகியோரின் ஒப்பந்த காலம் 31.12.2013 அன்று நிறைவு பெற்றது. மேற்படி பணியாளர்களின் ஒப்பந்தத்தினை மேலும் 89 நாட்களுக்கு நீட்டித்திட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலககுறிப்பு:**<br>மன்றம் அனுமதி வழங்கலாம். | ஜீப் வாகன ஓட்டுநர் (வண்டி எண் ) TN69C9148 திரு.அஸ்**கர் என்ற ஒப்பந்தபணியாளரை தவிர்த்து மற்ற ஒப்பந்த பணியாளர்களை 89 நாட்கள் பணி நீடிப்பு வழங்க மன்றம் தீர்மானிக்கிறது** |
| | 723 | **பொருள் எண்:-19**<br>காயல்பட்டணம் நகராட்சி பகுதி 7-வது வார்டு கீழநெய்னார் தெருவில் இருந்து சிங்கித்துறை வடக்கு காலனி வரையுள்ள சாலை பழுதடைந்துள்ளதால் புதிய சாலை அமைத்து தருமாறு கேட்டுக் கொண்ட 7-வது வார்டு உறுப்பினர் திரு.ஜே.அந்தோணி அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கு.<br>**அலுவலககுறிப்பு:**<br>மன்றம் அனுமதி வழங்கலாம். | ஒத்தி வைக்கப்படுகிறது |
| | 724 | **பொருள் எண்:-20**<br>காயல்பட்டணம் நகராட்சி பகுதி 7-வது வார்டு தீவுத் தெருவில் இருந்து புகாரி ஷரீப்பிற்கு செல்லும் சாலை பழுதடைந்துள்ளதால் மேற்படி சாலையினை சீரமைத்து தறுமாறு கேட்டுக் கொண்ட 7-வது வார்டு உறுப்பினர் திரு.ஜே.அந்தோணி அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கு. | ஒத்தி வைக்கப்படுகிறது |

| | | | |
|---|---|---|---|
| | | **அலுவலககுறிப்பு:**மன்றம் அனுமதி வழங்கலாம். | |
| | 725 | **பொருள் எண்:-21**<br>காயல்பட்டணம் நகராட்சிக்குப் பாத்தியப்பட்ட புல.எண்.392/5 ல் இடத்தினை ஜே.சி.பி இயந்திரம் மூலம் சுத்தம் செய்திட நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:**<br>மன்றம் அனுமதி வழங்கலாம் | மயானகரையாக இருப்பதால் பாதுகாப்பான முறையில் சுத்தம் செய்திட மன்றம் அனுமதி வழங்குகிறது |
| | 726 | **பொருள் எண்:-22**<br>நகராட்சி அலுவலகத்தில் ஜெராக்ஸ் எடுக்கும் இயந்திரம் பழுதடைந்த நிலையில் உள்ளது. அலுவலக கோப்புகள் கடிதங்கள் வெளியிடத்தில் நகல் எடுக்க வேண்டிய நிலையில் உள்ளது. எனவே அலுவலகத்தில் உள்ள நகல் எடுக்கும் இயந்திரத்தை பழுது நீக்க கியூடெக் சர்வீஸ் சென்டர் திருநெல்வேலி மூலம் வழங்கிய விலைப்புள்ளி ரூ.14650/- ஐ மன்றத்தின் அனுமதிக்காக<br>**அலுவலக குறிப்பு:**<br>அலுவலக அத்தியாவசியமான கடிதங்கள் கோப்புகள் நகல் எடுக்க வேண்டியுள்ளதால் மன்றம் அனுமதி வழங்கலாம். | மன்றம் அனுமதி வழங்குகிறது |
| | 727 | **பொருள் எண்:-23**<br>காயல்பட்டணம் நகராட்சியில் இரண்டாவது பைப் லைன் குடிநீர் திட்டபணிகள் நடைபெற்று வருகிறது அதற்கு புதிய பணியிடங்களை தோற்றுவிக்க நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு பிரேரனை அனுப்ப மன்றத்தின் அனுமதிக்காக.<br>**அலுவலக குறிப்பு:-**<br>மன்றம் அனுமதி வழங்கலாம். | மன்றம் அனுமதி வழங்குகிறது |
| | 728 | **பொருள் எண் -24**<br>மாண்புமிகு தமிழக முதல்வர் காயல்பட்டணம் நகராட்சிக்கு வழங்கிய பயோகாஸ் திட்டத்திற்கான இடம் தேர்வு செய்வது குறித்து மாவட்ட ஆட்சியர் அனுப்பியுள்ள கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும்<br>**அலுவலக குறிப்பு:**<br>மன்றம் பார்வையிட்டு முடிவு செய்லாம். | பயோகேஸ் அமைக்க 392/5 சர்வே எண் உகந்தது அல்ல என்று மன்றம் தீர்மானிக்கிறது |

| | | | |
|---|---|---|---|
| | 729 | **பொருள் எண்:-25**<br>காயல்பட்டணம் நகராட்சிக்கு பாத்தியப்பட்ட தென்பாக கிராம பகுதியில் உள்ள நிலங்கள் குறித்த அறிக்கை திருச்செந்தூர் தாலுகா அலுவலகத்தில் இருந்து பெறப்பட்டது. அவைகளை ஆக்கிரமிப்புகளில் இருந்து பாதுகாக்க அந்நிலங்களை சுற்றி சுவர் எழுப்ப மதிப்பீடு தயாரிக்க கோரி நகர்மன்ற தலைவர் அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.<br>**அலுவலக குறிப்பு:**<br>மன்றம் பார்வையிட்டு முடிவு செய்யலாம். | நகராட்சிக்கு பாத்தியப்பட்ட நிலத்தினை முள்வேலி அமைத்து பாதுகாக்க மன்றம் தீர்மானிக்கிறது |
| | 730 | **பொருள் எண்:-26**<br>காயல்பட்டணம் நகராட்சிக்கு பாத்தியப்பட்ட வட பாக கிராம பகுதியில் உள்ள நிலங்களை ஆய்வு செய்து அறிக்கை தர திருச்செந்தூர் வட்டாச்சியரை கேட்டுக் கொள்ள கேட்டுக் கொண்ட நகர்மன்ற தலைவர் அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும.<br>**அலுவலக குறிப்பு:**<br>மன்றம் பார்வையிட்டு முடிவு செய்யலாம். | காயல்பட்டணம் நகராட்சிக்கு பாத்தியப்பட்ட வடபாக கிராம பகுதியிலுள்ள நிலங்களை ஆய்வு செய்து அறிகை தர திருச்செந்தூர் வட்டாட்சியரை கேட்டு கொள்ள மன்றம் தீர்மானிக்கிறது |
| | 731 | **பொருள் எண்:-27**<br>காயல்பட்டணம் நகராட்சியில் உள்ள புறம்போக்கு உட்பட அனைத்து காலியிடங்களில் மக்கள் குடியிருப்பு பகுதிகளில் உடை மரங்கள் உட்பட பல்வேறு செடிகள் வளர்ந்துள்ளன இவைகளால் சுகாதார கேடும் சில காலங்களில் தீ பற்றி எரியும் ஆபத்து சூழலும் மேலும் அதில் உள்ள விஷ ஜந்துக்களால் உயிர்க்கு ஆபத்து ஏற்படும் நிலை ஏற்படுகிறது. எனவே இவ்விடங்களில் உள்ள இது போன்ற செடிகளை அப்புறப்படுத்த அந்நிலங்களின் உரிமையாளர்களை உடனடியாக அகற்றிட அறிவிப்பு செய்திட கேட்டுக் கொண்ட நகர்மன்ற தலைவர் அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும்.<br>**அலுவலக குறிப்பு:**<br>மன்றம் பார்வையிட்டு முடிவு செய்யலாம். | நகராட்சிக்கு பாத்தியப்பட்ட இடங்களில் பொதுமக்களுக்கு இடையூறாக உள்ள முட்செடிகளை (உடைமரங்கள்) மற்றும் அடர்ந்த செடிகளை அகற்ற நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் தீர்மானிக்கிறது.மேலும் தனியார் இடங்களிலுள்ள உடைமரங்களை அகற்றுவதற்கு அறிவிப்பு **செய்து நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் தீர்மானிக்கிறது** |

| | | | |
|---|---|---|---|
| | 732 | **மன்றப்பொருள் -28**<br>காயல்பட்டணம் நகராட்சி புதிய பேருந்து நிலையத்திலுள்ள பொது சுகாதார கழிப்பிடம் பகுதியில் அமைந்துள்ள உறைகிணற்றில் உள்ள மின்மோட்டார் அடிக்கடி பழுது அடைந்து விடுவதால் கழிப்பறை சுத்தம் செய்யவும், பொதுமக்கள் பயன்படுத்தவும் பெரிதும் சிரமப்பட்ட வேண்டியுள்ளது எனவே மேற்படி மின்மோட்டாரை மாற்றி தர மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>மின்மோட்டரை மாற்றி அமைக்க மன்றம் அனுமதி வழங்கலாம். | புதிய பேருந்து நிலையத்தில் உள்ள நவீன கழப்பிடத்தில் உள்ள பழைய மின்மோட்டாரை எடுத்துவிட்டு புதிய மின்மோட்டார் பொருத்தி பெண்கள் கழிப்பிடத்தில் உள்ள அதற்கான Switchboard எடுத்துவிட்டு ஆண்கள் கழிப்பிடத்தில் அமைத்து மழையிலிருந்து மின்மோட்டாரை பாதுகாக்கும் வகையில் அமைத்திட வேண்டுமென மன்றம் தீர்மானிக்கிறது |
| | 733 | **மன்றப்பொருள்-29**<br>காயல்பட்டணம் நகராட்சி பகுதியில் போக்குவரத்துக்கும் பொதுமக்களுக்கும் இடையூறாக சுற்றித்திரியும் கால்நடைகளை பிடித்து அபதாரம் விதித்திட தீர்மான எண் 397-ன் படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அவ்விதம் பிடிக்கப்படும் மாடுகளை மாட்டின் சொந்தகாரர்களை யாரேனும் வராத பட்சத்தில் கால்நடைகளை குலசேகரபட்டிணத்திலுள்ள கோசலையில்(பசு பாதுகாப்பு சங்கம்) ஒப்படைப்பு செய்யவும் இது சம்பந்தமான விளம்பர போஸ்டர்கள் கால்நடைகளுக்கு வேண்டிய தீவனம் குடிநீர் வசதி போன்றவைகளை செய்திட ஆகும் செலவினங்களின் உத்தேச மதிப்பு ரூ.50000/- செலவு செய்ய மன்ற அனுமதி வேண்டி<br>**அலுவலக குறிப்பு**<br>மன்றம் அனுமதி வழங்கலாம் | மன்ற அனுமதி வழங்குகிறது |

| | | | |
|---|---|---|---|
| | 734 | **மன்றப்பொருள் -30**<br>காயல்பட்டணம் நகராட்சி பொது சுகாதார பிரிவின் கீழ் உள்ள TN69 AT2821 (Dumper Pin) லாரி ஜாக்கில் ஆயில் கழிவு ஏற்பட்டு உள்ளதால் ஜாக்கி சரியாக வேலை செய்ய வில்லை தற்போது நகராட்சியில் ஒரு வாகனம் உள்ளதால் அதை அவசரம் அவசியம் கருதி பழுது பார்க்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>மன்றம் அனுமதி வழங்கலாம். | பொருள் எண் 30-ல்குறிப்பிட்டுள்ள வாகனத்திற்கு உத்திரவாத காலம் (Warranty Period) இருக்குமேயானால் வாகனம் சப்ளை செய்த நிறுவனத்தின் மூலம் பழுது பார்க்கும் பணி செய்யவும் உத்திரவாத காலம் முடிவு பெற்றிருந்தால் நகராட்சியின் மூலம் பழுது நீக்கம் செய்யவும் மன்றம் தீர்மானிக்கலாம் |